# 05.06.2026 செய்திகள்

## 2027-28 காலகட்டத்துக்கான ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் 5 தற்காலிக உறுப்பு நாடுகள் தேர்வு

- தற்காலிக உறுப்பினர்களாக ஆஸ்திரியா, கிர்கிஸ்தான், போர்ச்சுகல், டிரினிடாட் டொபேகோ, ஜிம்பாப்வே ஆகிய 5 நாடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா.பொதுச்சபையில் புதன்கிழமை நடைபெற்ற விறுவிறுப்பான ரகசிய வாக்கெடுப்பில் இந்நாடுகள் வெற்றி பெற்றன.
- தற்போதைய தற்காலிக உறுப்பினர்களான டென்மார்க், கிரேக்கம், பாகிஸ்தான், பனாமா, சோமாலியா ஆகிய நாடுகளின் பதவிக்காலம் 2026 இறுதியில் நிறைவடைய உள்ள நிலையில், புதிய நாடுகள் வரும் 2027, ஜனவரி 1 முதல் 2 ஆண்டு காலப்பொறுப்பை ஏற்கும்.
- மேற்கு ஐரோப்பிய மற்றும் இதர நாடுகள் பிரிவில் 2 இடங்களுக்காக நடைபெற்ற போட்டியில் போர்ச்சுகல் 134 வாக்குகளையும், ஆஸ்திரியா 131 வாக்குகளையும் பெற்று வெற்றி பெற்றன.
- ஆப்பிரிக்க மற்றும் ஆசிய-பசிபிக் பிராந்தியத்துக்கான இடங்களில் ஜிம்பாப்வே 182 வாக்குகளைப் பெற்று எளிதாக வென்றது.
- மற்றொரு இடத்துக்கு நடைபெற்ற கடுமையான போட்டியில், 4 சுற்று வாக்குப்பதிவுகளுக்குப் பிறகு கிர்கிஸ்தான் 142 வாக்குகளுடன் பிலிப்பின்ஸை வீழ்த்தியது. இதன்மூலம், கிர்கிஸ்தான் முதல்முறையாக பாதுகாப்பு கவுன்சிலில் தடம் பதிக்கிறது.
- தென் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகள் பிரிவில் டிரினிடாட் டொபேகோ நாடு 181 வாக்குகள் பெற்று தற்காலிக உறுப்பினராகத் தேர்வானது.
- மொத்தம் 15 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ரஷியா ஆகிய 5 நாடுகள் 'வீட்டோ' அதிகாரம் கொண்ட நிரந்தர உறுப்பினர்களாக உள்ளன.
- மீதமுள்ள 10 தற்காலிக இடங்களில், தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 5 புதிய நாடுகள், ஏற்கெனவே பதவியில் நீடிக்கும் பஹ்ரைன், கொலம்பியா, காங்கோ ஜனநாயகக் குடியரசு, லாத்வியா, லைபீரியா ஆகிய நாடுகளுடன் இணைந்து அடுத்த ஆண்டு முதல் செயல்படவுள்ளன.

## நீதித்துறையில் ஏ.ஐ., பயன்பாடு வரைவு விதிமுறைகள் வெளியீடு

» எதற்கெல்லாம் ஏ.ஐ.. பயன்படுத்தலாம்

- சட்ட ஆராய்ச்சி, முந்தைய தீர்ப்புகள் மற்றும் சட்டப்பிரிவுகளைத் தேடி எடுப்பது.
- தீர்ப்புகள் மற்றும் நீதிமன்ற விவாதங்களை உடனுக்குடன் மொழிபெயர்த்து உரையாக மாற்றுவது.
- வழக்குகளைப் பட்டியலிடுதல், நோட்டீஸ் மற்றும் சம்மன்களைத் தயார் செய்தல்.

- மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேகக் கருவிகள் மற்றும் சாமானிய மக்களுக்கு உதவும். சாட்பாட்கள் எனப்படும், எழுத்து வடிவிலான உரையாடல்.
- மனுவில் உள்ள குறைபாடுகளை நீக்குவதற்கு.
- வழக்குகளை சரியான நேரத்தில் விசாரணைக்காக பட்டியலிடுவதற்கு.

» எதற்கெல்லாம் ஏ.ஐ.. பயன்படுத்த கூடாது

- தீர்ப்பளிக்கவோ அல்லது தண்டனை வழங்கவோ இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்த கூடாது.
- ஜாமின் வழங்கலாமா என்பதை ஏ.ஐ. தீர்மானிக்கக் கூடாது.
- சாட்சிகளின் நம்பகத்தன்மையையோ, குற்றம் சாட்டப்பட்டவர்களின் எதிர்கால நடத்தையையோ ஏ.ஐ..கணிக்கக் கூடாது.
- நீதிபதிகள், வழக்கறிஞர்களை ரகசியமாகக் கண் காணிக்கும் பணிகளுக்கு பயன்படுத்தக் கூடாது.
- நீதி வழங்கும் முக்கியப் பொறுப்பில் செயற்கை நுண்ணறிவு தலையிட முடியாது.

## 5,200 எத்தனால் வினியோக நிலையம் நாடு முழுவதும் அமைக்கிறது அரசு

- நம் நாட்டின் கச்சா எண்ணெய் இறக்குமதியை குறைக்கவும், சுற்றுச்சூழல் மாசுபாட்டை கட்டுப்படுத்தவும் பெட்ரோலுடன் எத்தனால் கலக்கும் திட்டத்தை மத்திய அரசு அமல்படுத்தியது.
- தற்போது, பெட்ரோலில் 20 சதவீதம் வரை எத்தனால் கலக்கப்படுகிறது. இந்த வகை பெட்ரோல், 'இ – 20' என்ற பெயரில் விற்பனையாகிறது.
- 'இ 85' எனப்படும் 85 சதவீதம் எத்தனாலில் இயங்கும், 'மாருதி சுசூகி வேகன் ஆர்' காரின் அறிமுக நிகழ்ச்சி டில்லியில் நேற்று நடந்தது.
- பெட்ரோலுடன் அதிகளவில் எத்தனாலை கலந்து பயன்படுத்தும் தொழில்நுட்பம், 'பிளெக்ஸ் பியூயல்' எனப்படுகிறது.
- தற்போது, 85 சதவீதம் முதல் 100–சதவீதம் வரை எத்தனாலில் இயங்கக் கூடிய இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் சந்தைக்கு வர உள்ளன.
- விற்பனையாகும் வாகனங்களில், 50 சதவீதம், 'பிளெக்ஸ் பியூ யல்' ஆக மாறினால், எத்தனால் தேவை, 400 கோடி லிட்டராக உயரும். இதுவிவசாயிகளுக்கும், நாட்டின் எரிசக்தி பாதுகாப்புக்கும் பக்க பலமாக அமையும்.

WHY SURESH....

- Comprehensive Coverage
- Expert Faculty & Mentorship
- Rigorous Testing & Analysis
- Structured Study Materials
- 24/7 Doubt - Clearing Support
- Offline Class / Online Class